# க. பொ. த (சாதாரண தர)ப் பரீட்சை - 2019
## 12 - சைவநெறி
## புள்ளி வழங்கும் திட்டம்

பரீட்சார்த்திகள் முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையெழுதும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

| | |
|---|---|
| வினாத்தாள் II இற்குரிய மொத்தப் புள்ளிகள் | **= 60** |
| வினா 1 – கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் | **10 X 02 = 20 புள்ளிகள்** |
| வினா 2 – கட்டாய வினா மொத்தப் புள்ளிகள் | **02 X 05 = 10 புள்ளிகள்** |
| வினா 3 – 7 வரை எவையேனும் 03 வினாக்கள் மொத்தப் புள்ளிகள் | **03 X 10 = 30 புள்ளிகள்** |
| | **புள்ளிகள் 60** |

தனித்தனியாக வினாக்களுக்குப் புள்ளிகள் பகிர்ந்தளிக்கப்படும் முறை.

வினா 1 – 10 X 2 புள்ளிகள் வீதம், மொத்தம் :- 20 புள்ளிகள்.

| | | |
|---|---|---|
| வினா 2 – | (அ) பாடல்கள் 02 அடிமுறை வழுவாது எழுதுதல் | **02 X 03 = 06** |
| | (ஆ) பொழிப்புரை எழுதுதல் | **02 X 02 = 04** |
| | | **புள்ளிகள் 10** |

**வினா 3**

(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 4**

(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 5**

(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 6**

(i) - 02
(ii) - 03
(iii) - 05
மொத்தம் = 10 புள்ளிகள்

**வினா 7**

05 + 05 = 10 புள்ளிகள்

**பகுதி I மொத்தம் 40 புள்ளிகள்**
**பகுதி II மொத்தம் 60 புள்ளிகள்**
**மொத்தம் 100 புள்ளிகள்**

விசேட அறிவுறுத்தல் ஒரு சரியான விடைக்கு 01 புள்ளி வீதம் மொத்தப் புள்ளிகள் **01 X 40 = 40**
கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளைப் பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

**சரியான விடைகளின் தொகை** **40**
**பத்திரம் I இன் மொத்தப் புள்ளி** **40**

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ........................................................................ ✓ △ $\frac{4}{5}$
........................................................................
........................................................................

(ii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(iii) ........................................................................ ✓ △ $\frac{3}{5}$
........................................................................
........................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம / மேலதிக பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை ○ அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II” எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் “வினாப்பத்திரம் I” என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி “வினாப்பத்திரம் II, III” எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

o o o

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

12 T I,II

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2019

ශෛවනෙරි I, II
சைவநெறி I, II
Saivanery I, II

02.12.2019 / 0830 - 1140

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## சைவநெறி I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** “வானோரும் ஆனை முகத்தானைக் காதலாற் கூப்புவர்...” என்பதில் போற்றப்படும் தெய்வம்
(1) சிவபெருமான் (2) விநாயகர் (3) இந்திரன் (4) மன்மதன்

**2.** ‘இருக்கு’ என்ற சொல்லின் பொருள்
(1) பாட்டு (2) அறிவு (3) இசை (4) மாயம்

**3.** முருகனைப் போற்றும் கந்தரலங்காரத்தைப் பாடிய ஆசிரியர்
(1) தாயுமானவர் (2) குமரகுருபரர் (3) அருணகிரிநாதர் (4) அபிராமிப்பட்டர்

**4.** இலிங்க வழிபாடு செய்து முத்தியடைந்தவர்
(1) சேரமான் பெருமாள் (2) அப்பூதியடிகள்
(3) சிறுத்தொண்டர் (4) இளையான்குடிமாற நாயனார்

**5.** ஆலயங்களில் பொதுவாக பிரதிஷ்டை செய்யப்படும் வைரவ மூர்த்தம்
(1) கால வைரவர் (2) ஞான வைரவர் (3) மகா வைரவர் (4) நரசிம்ம வைரவர்

**6.** அபரக்கிரியையுடன் **தொடர்புபடாதது**
(1) ஏகோதிட்டம் (2) சபிண்டீகரணம் (3) கன்னிகாதானம் (4) மாசிகம்

**7.** ‘உபவாசம்’ என்பது,
(1) இறைவன் மேலிருந்து கீழ்நோக்கி வருதலைக் குறிக்கும்.
(2) உணவைச் சுருக்குதல் அல்லது தவிர்த்தல் என்பதனைக் குறிக்கும்.
(3) முறைப்படி விரதத்தை அனுட்டித்தலைக் குறிக்கும்.
(4) இறைவனின் அருகே வசித்தல் என்பதனைக் குறிக்கும்.

**8.** "பாலுடன் கலந்த இனிய சோற்றை உண்டு, பசித்துன்பத்தை ஒழிப்பாயாக" என்ற இறைவனின் அசரீரி வாக்கை உணர்ந்த நாயனார் யார்?
(1) இயற்பகை நாயனார் (2) திருஞானசம்பந்த நாயனார்
(3) குங்கிலியக்கலய நாயனார் (4) திலகவதியார்

**9.** "மகிழவரு மணம்புணர்ந்த மாதினியார் மணிவயிற்றில்..." எனும் பாடலில் சேக்கிழாரால் புகழப்படுபவர்
(1) திலகவதியார் (2) மங்கையர்க்கரசியார்
(3) புனிதவதியார் (4) இசைஞானியார்

**10.** சிவஞானபோதத்தின் வழி நூலாக அமைவது,
(1) சிவப்பிரகாசம் ஆகும். (2) திருவருட்பயன் ஆகும்.
(3) சிவஞானசித்தியார் ஆகும். (4) நெஞ்சுவிடுதூது ஆகும்.

**11.** "யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி" என அன்னதானத்தின் சிறப்பை வலியுறுத்தியவர்
(1) திருநாவுக்கரசர் (2) திருமூலர் (3) தாயுமானவர் (4) ஔவையார்

**12.** கோட்டை இராச்சிய காலத்துக்குரிய சிவாலயமாக, இரத்மலானையில் அடையாளங் காணப்பட்ட சிவாலயத்தின் பெயர் யாது?
(1) அழகேச்சரம் (2) பொன்னம்பலவாணேச்சரம்
(3) சந்திரசேகரீச்சரம் (4) திருநந்தீச்சரம்

**13.** செல்வங்கள் வாய்க்கப்பெற்ற செட்டியாரின் மனைவியாகிய அமராவதி நோற்ற, சித்திரபுத்திரனார் விரத தினம்
(1) ஆடிச்செவ்வாய் (2) சித்திரா பௌர்ணமி
(3) மாசிமகம் (4) ஆனி உத்தரம்

**14.** அன்பில்லாத வாழ்வை "என்புதோல் போர்த்த உடம்பு" எனக் கூறியவர்
(1) திருமூலர் (2) தாயுமானவர் (3) திருவள்ளுவர் (4) குமரகுருபரர்

**15.** இலங்கையிலும் இந்தியாவிலும் சைவப்பிரகாச வித்தியாசாலைகளை ஆரம்பித்த பெரியார்
(1) சு. சிவபாத சுந்தரனார் (2) இந்து போட் சு. இராசரத்தினம்
(3) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (4) சேர். பொன். இராமநாதன்

**16.** கிழக்கிலங்கையில் முருகனது வேல் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயங்களை அழைக்கும் மரபு,
(1) தேசத்துக் கோயில்கள் எனப்படும். (2) வேல்விடு தலங்கள் எனப்படும்.
(3) பாசறைத் தலங்கள் எனப்படும். (4) திருப்படைக் கோயில்கள் எனப்படும்.

**17.** சைவசித்தாந்த நோக்கில், மூவகை ஆன்மாக்களுள் சகலர்க்கு அருள்புரிவதற்காகச் சிவபெருமான்,
(1) மானிட வடிவந்தாங்கி வருவார். (2) பார்வதி சமேத பரமேசுவரராய் வருவார்.
(3) ஒளிவடிவில் வருவார். (4) இலிங்கவடிவில் வருவார்.

**18.** கடவுள் ஒருவரே என்பதைக் காட்டும், மிகப் பொருத்தமான பாடல்கள் அடங்கும் தொகுதி
(1) "குனித்த புருவமும்...", "வானாகி மண்ணாகி..."
(2) "எல்லா உலகமும் ஆனாய் நீயே...", "தூக்கும் பனுவல் துறை..."
(3) "ஈறாய் முதல் ஒன்றாய்...", "தில்லைவாழ் அந்தணர்தம்..."
(4) "அப்பன்நீ, அம்மைநீ...", "ஏகன் அநேகன்..."

**19.** "ஆடம்பர வாழ்வு ஆன்மிக மேம்பாட்டுக்கு ஆகாது" எனும் சிந்தனையினை மாணவர்களுக்கு முன்வைத்தவர்
(1) உமாபதி சிவாச்சாரியார் (2) மறைஞான சம்பந்தர்
(3) மெய்கண்டதேவர் (4) அருணந்தி சிவாச்சாரியார்

**20.** மேல்வருவனவற்றுள் சனிபகவானுக்குரிய வழிபாட்டுடன் தொடர்புடைய மிகப் பொருத்தமான தொகுதி
(1) எள்ளுச்சாதம், சிவப்புப்பட்டு (2) எள்ளு, மஞ்சள்பட்டு
(3) எள்ளுச்சாதம், வெள்ளைப்பட்டு (4) எள்ளு, கறுப்புப்பட்டு

**21.** மேல்வருவனவற்றுள் சைவசமயத்தின் பிரதான நெறிமுறைகளுள் ஒன்று
(1) எல்லா உயிரினங்களும் இறைவனின் வடிவங்களே எனக் கருதுதல்
(2) பிற சமயங்களைக் கண்டித்தல்
(3) சாதி ஆசார வேறுபாடுகளை ஆதரித்தல்
(4) துறவறத்தினை வலியுறுத்தல்

**22.** மேல்வருவனவற்றுள் ஆலயங்களில் செய்யத்தக்க செயல்களுள் ஒன்றாக அமைவது
(1) பெண்கள் அட்டாங்க நமஸ்காரம் செய்தல்
(2) திரைச்சீலை மூடியிருக்கும்போது இறைவனை வழிபடுதல்
(3) திருக்கோயிலில் அலகிடல், மெழுக்கிடல் முதலிய செயல்களில் ஈடுபடல்
(4) மூலமூர்த்திக்கு தீப ஆராதனை நிகழ்த்தும்போது, கோயிலைச் சுற்றி வலம் வருதல்

**23.** 'உலகப்பெருமஞ்சம்' எனச் சிறப்பிக்கப்படும் மஞ்சத்தில் ஆறுமுக சுவாமியார் எழுந்தருளும் ஈழத்துக் கோயில்
(1) நல்லூர் கந்தசுவாமி கோயில்		(2) இணுவில் கந்தசுவாமி கோயில்
(3) மண்டூர் முருகன் கோயில்		(4) கதிர்காமக் கந்தன் கோயில்

**24.** படிக்கும் எவரது உள்ளத்தையும் உருக்கும் தன்மை பொருந்திய மாணிக்கவாசகர் பாடிய திருப்பாடல்
(1) "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு..."
(2) "உற்றுமை சேர்வது மெய்யினையே..."
(3) "மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்..."
(4) "பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்..."

**25.** தென்பாரதத்தில் தீபாவளி கொண்டாடியமைக்கான ஆதாரங்களுள் ஒன்றாக விளங்குவது
(1) இராஜேந்திரன் கல்வெட்டு		(2) 2 ஆம் இராஜராஜன் கல்வெட்டு
(3) திருப்புவன மல்லனின் கன்னட கல்வெட்டு		(4) இராஜசிம்மன் கல்வெட்டு

**26.** "சத்யம் வத, தர்மம் சர" என வாய்மையின் சிறப்பை உணர்த்தும் நூல்
(1) உபநிடதம்		(2) ஆகமம்		(3) புராணம்		(4) வேதம்

**27.** கொல்லிமழவன் என்ற சிற்றரசனது பிள்ளையைப் பீடித்த, முயலகன் என்னும் நோயை நீக்குதற்காய் திருஞானசம்பந்தர் பாடியருளிய பதிகம்
(1) "இடரினும் தளரினும்..."		(2) "அவ்வினைக்கிவ்வினை..."
(3) "துணிவளர் திங்கள்..."		(4) "மட்டிட்ட புன்னை..."

**28.** இறைவனுக்கு திருநந்தவனம் அமைத்துத் தொண்டு புரிந்து, சிவபதம் அடைந்தவர்கள் அடங்கும் தொகுதி
(1) திலகவதியார், முருகநாயனார்		(2) சிவகாமியாண்டார், திருஞானசம்பந்தர்
(3) திலகவதியார், கண்ணப்பநாயனார்		(4) முருகநாயனார், திருநாளைப்போவார்

**29.** மாயாதுன்னையின் சீதாவாக்கை இராச்சியத்தில் அமைக்கப்பட்டதாகக் கருதப்படும் சிவன் கோயில்
(1) வெரண்டி கோயில்		(2) நகரீசன் கோயில்
(3) முனீஸ்வரம்		(4) தெவிநுவர கோயில்

**30.** "எண்ணென் குணமுறைக்கு இசைந்த வண்ணமே..." என்பதில் இறைவனின் எத்தன்மை குறிப்பிடப்படுகிறது?
(1) மூவகைத் திருமேனி		(2) எண்குணம்
(3) ஐந்தொழில்		(4) இரு இலக்கணம்

**31.** பஞ்சாங்கத்தின் ஐந்து உறுப்புகளுள் **உள்ளடங்காதது**
(1) வாரம்		(2) கரணம்		(3) ஞானம்		(4) திதி

**32.** பிராரப்த வினை மூன்றும் அடங்கும் தொகுதி
(1) ஆணவம், கன்மம், மாயை		(2) இச்சை, பரேச்சை, அநிச்சை
(3) காலம், நியதி, கலை		(4) சதாக்கியம், ஈசுரம், சுத்தவித்தை

**33.** பௌத்தத்தில் பௌராணிகர் எனப்படுவோர்
(1) கௌதம புத்தரை விஷ்ணுவின் அவதாரமாக கருதுபவர்கள்
(2) கௌதம புத்தரை மட்டும் வழிபடுவோர்
(3) அவலோகிதீஸ்வரரை வழிபடுபவர்கள்
(4) கௌதம புத்தரை கடவுளாக ஏற்றுக்கொள்ளாதோர்

**34.** இரத்ததானம், உடல் உறுப்புத்தானம் போன்ற ஒப்புரவுச் செயற்பாடுகளுக்கு உதாரணமாகத் திகழ்ந்த இந்து மன்னர்கள் அடங்கும் தொகுதி
(1) அரிச்சந்திரன், துஷ்யந்தன்
(2) அரிச்சந்திரன், குமணன்
(3) துஷ்யந்தன், சிபிச்சக்கரவர்த்தி
(4) குமணன், சிபிச்சக்கரவர்த்தி

**35.** மாணிக்கவாசகரின் சமூகப்பணிகளுள் ஒன்று
(1) பாண்டிய மன்னனின் வெப்புநோயைத் தீர்த்தமை
(2) தில்லையில் பௌத்த மன்னனின் மகளுக்குப் பேசும் ஆற்றலை வழங்கியமை
(3) வறண்ட பாலைநிலத்தை வளமான நெய்தல் நிலமாக்கியமை
(4) சமணத்தைத் தழுவியிருந்த பல்லவ மன்னனைச் சைவனாக மாற்றியமை

**36.** திருமணச்சடங்கில் பசுவைத் தரிசித்தலின் (கோ தரிசனம்) நோக்கமானது
(1) புதுவாழ்வை ஆரம்பிக்கும்போது அது மங்கலகரமானதாயும் புனிதமானதாயும் இருத்தலைக் குறித்தல்
(2) வாழ்வில் புரிந்துணர்வையும் விட்டுக்கொடுப்பையும் அறிவுறுத்தல்
(3) முதுமையிலும் சேர்ந்தே இருப்போம் என்பதனைக் குறித்தல்
(4) உள்ளத்தாலும் உடலாலும் இருவரும் ஒருவர் என்ற தத்துவத்தை உணர்த்துதல்

**37.** சுவாமி விபுலாநந்தர், பத்திரிகையாசிரியராக பணி புரிந்த 'வெளியீடுகள்' அடங்கும் தொகுதி
(1) சைவ உதயபானு, இலங்கை நேசன், பிரபுத்தபாரத
(2) விஞ்ஞானதீபம், விவேகானந்ததீபம், யாழ்நூல்
(3) விஞ்ஞானவர்த்தினி, வேதாந்தபரிபாஷை, இராமகிருஷ்ணதீபம்
(4) வேதாந்தகேசரி, இராமகிருஷ்ணவிஜயம், பிரபுத்தபாரத

- மேல்வரும் அட்டவணையில் A இலிருந்து I வரையில் தரப்பட்டுள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு **38** தொடக்கம் **40** வரையான ஒவ்வொரு வினாவுக்குமான விடையைத் தெரிவுசெய்க.

| சைவம் வளர்த்த குரவர்கள் | வாழ்வியல் சம்பவம் | நூல்கள் |
|---|---|---|
| A - மெய்கண்ட தேவர் | D - பூட்டப்பட்டிருந்த திருமறைக்காட்டு திருத்தலத்தை திறக்கப் பாடியமை | G - திருக்கோவையார் |
| B - மாணிக்கவாசகர் | E - திருவெண்ணெய் நல்லூரில் முத்தியடைந்தமை | H - திருத்தாண்டகம் |
| C - திருநாவுக்கரசர் | F - பாண்டிய மன்னன் அளித்த பொற்காசுகளை சிவனடியார்களது பசி போக்கப் பயன்படுத்தியமை | I - சிவஞானபோதம் |

**38.** சைவசித்தாந்தம் சார்பான முப்பொருளுண்மையை முதன்முதலாக நிறுவியவரோடு தொடர்புடைய தொகுதி
(1) ADH (2) AEI (3) BDH (4) BEI

**39.** "என் கடன் பணி செய்து கிடப்பதே" எனக் கூறியவரோடு தொடர்புடைய தொகுதி
(1) ADI (2) AEH (3) CDH (4) CEG

**40.** திருவாசகம் பாடியவரோடு தொடர்புடைய தொகுதி
(1) BDG (2) BFG (3) CEI (4) CFG

* *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2019
க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2019

විෂයය අංකය / பாட இலக்கம்: 12

විෂයය / பாடம்: சைவநெறி

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 2 | 21. | 1 | 31. | 3 |
| 02. | 1 | 12. | 4 | 22. | 3 | 32. | 2 |
| 03. | 3 | 13. | 2 | 23. | 2 | 33. | 1 |
| 04. | 1 | 14. | 3 | 24. | 4 | 34. | 4 |
| 05. | 2 | 15. | 3 | 25. | 3 | 35. | 2 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 1 | 36. | 1 |
| 07. | 4 | 17. | 1 | 27. | 3 | 37. | 4 |
| 08. | 3 | 18. | 4 | 28. | 1 | 38. | 2 |
| 09. | 1 | 19. | 2 | 29. | 1 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 2 | 40. | 2 |

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

මුළු ලකුණු / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: 25 / 40

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: 25 / 40

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**12 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

ශෛවනෙරි I, II
**சைவநெறி I, II**
Saivanery I, II

## சைவநெறி II

* **முதலாம்** வினாவும் **இரண்டாம்** வினாவும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* முதலாம் வினாவின் விடைக்கு **20** புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **10** புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

**1.** மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) 'சிவம்' என்ற சொல்லின் பொருள் யாது?

(ii) புராதன இந்தியாவின் மருத்துவக் கலையுடன் தொடர்புடைய வேதம் எது?

(iii) "எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்..." எனும் பதிகத்தில் குறிப்பிடப்படும் இலங்கை வேந்தன் யார்?

(iv) கூத்துக்களுக்குப் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் **இரண்டினைத்** தருக.

(v) இலங்கையில் சைவசமுதாயத்தின் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு சைவபரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட சைவப்பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக.

(vi) பிரம்மஹத்தி தோசம் நீங்கப் பெறுவதற்காக ஸ்ரீராமர் வழிபட்ட ஈழத்துச் சிவத்தலங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(vii) கண்டி தலதா மாளிகைக்கு அண்மையில் சிவனுக்காக அமைக்கப்பட்ட ஆலயம் எது?

(viii) சைவ வாழ்வியலில் வேப்பமரத்தின் பயன்பாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ix) "ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்..." என்று வித்தியாதானத்தின் சிறப்பைப் பாடியவர் யார்?

(x) பண்டிகைக் காலங்களில் நாம் ஈடுபட வேண்டிய சமயரீதியான செயற்பாடுகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

**2.** (i) மேல்வரும் பாடல்களுள் **இரண்டினை** அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

(ii) அவற்றின் பொழிப்புரையை எழுதுக.

(அ) "குனித்த புருவமுங் கொவ்வைச்..."

(ஆ) "உண்ணுஞ் சோறு பருகுநீர்..."

(இ) "ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை..."

(ஈ) "அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத..."

(உ) "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க..."

**3.** "ஈங்கிவைதாம் ஓங்கு புகழ்த் தென்புகலி வேந்தன் செயல்"

- திருக்களிற்றுப்படியார் -

(i) திருஞானசம்பந்தரின் மறுபெயர்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(ii) திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் வழங்கிய சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

(iii) திருஞானசம்பந்தர் ஆற்றிய சமூகப்பணிகள் **ஐந்தினைச்** சுருக்கமாக விளக்குக.

**4.** "அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது"

- பெரிய புராணம் -

(i) பெரிய புராணத்தின் 'காப்பிய நாயகன்' யார்?

(ii) மேற்குறித்த பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சிவசின்னங்கள் எவை?

(iii) வினா (ii) இல் நீர் குறிப்பிட்ட சிவசின்னங்களின் மகிமைகளை சுருக்கமாக விளக்குக.

**5.** "திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார் களன்றி
யொருமலத்தா ராயு முளர்"

- திருவருட்பயன் -

(i) மூவகை ஆன்மாக்கள் எவை?

(ii) மூவகை ஆன்மாக்களையும் பீடித்திருக்கும் மலம் யாது? ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.

(iii) ஆன்மாக்கள் விடுதலை பெறுவதற்கான **நால்வகை** மார்க்கங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**6.** "கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்."

- ஔவையார் -

(i) திருக்கேதீச்சர ஆலய தீர்த்தத்தின் பெயர் யாது?

(ii) பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில் இடம்பெறும் விழாக்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக.

(iii) மண்டூர் முருகன் ஆலயம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

**7.** மேல்வருவனவற்றுள் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) மார்கழித் திருவாதிரை

(ii) குமரகுருபரர்

(iii) பாடசாலையில் சைவம்

(iv) ஆகமங்கள்

* * *

# சைவநெறி – II

1. மேல்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

i. **'சிவம்' என்ற சொல்லின் பொருள் யாது?**
சைவத்தின் மூலமான மெய்ப்பொருள், செம்மை, மங்கலத்தைத் தருவது.

ii. **புராதன இந்தியாவின் மருத்துவக் கலையுடன் தொடர்புடைய வேதம் எது?**
அதர்வ வேதம்.

iii. **"எடுத்தவன் தருக்கை இழித்தவர் விரலால்" எனும் பதிகத்தின் குறிப்பிடப்படும் இலங்கை வேந்தன் யார்?**
இராவணன்

iv. **கூத்துகளுக்கு பயன்படுத்திய இசைக்கருவிகள் இரண்டினைத் தருக?**
மத்தளம், சல்லரி, உடுக்கு, பறைமேளம், நாதஸ்வரம்
**(இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

v. **இலங்கையில் சைவசமுதாயத்தின் மேம்பாட்டை இலக்காகக் கொண்டு சைவபரிபாலன சபையினரால் வெளியிடப்பட்ட பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடுக?**
இந்துசாதனம்

vi. **பிரம்மஹத்தி தோசம் நீங்கப் பெறுவதற்காக ஸ்ரீராமர் வழிபட்ட ஈழத்துச் சிவத்தலங்கள் இரண்டினைக் குறிப்பிடுக ?**
திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம், முன்னேச்சரம்
**(இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

vii. **கண்டி தலதா மாளிகைக்கு அண்மையில் சிவனுக்காக அமைக்கப்பட்ட ஆலயம் எது?**
நாத தேவாலயம்

viii. **சைவ வாழ்வியலில் வேப்பமரத்தின் பயன்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.**
தோலில் கொப்புளங்கள் நீங்கும், வயிற்றில் உள்ள புழுக்கள் அழியும், தொற்றுக் காய்ச்சல் நீங்கும்
**(இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

ix. **"ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்...." என்று வித்தியாதானத்தின் சிறப்பைப் பாடியவர் யார்?**
மகாகவி பாரதியார்

x. **பண்டிகைக் காலங்களில் நாம் ஈடுபட வேண்டிய சமயரீதியான செயற்பாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.**
வீட்டையும் வீட்டுச் சூழலையும் சுத்தப்படுத்துதல், வாசலில் மாக்கோலம் போடுதல், மாவிலை தோரணம் கட்டுதல், கும்பம் வைத்தல், தானம் செய்தல் போன்றன.
**(இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

**(2 x 10= 20 புள்ளிகள்)**

2. i. **மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.**

ii. **அவற்றின் பொழிப்புரையை எழுதுக.**

(அ) "குனித்த புருவமுங் கொவ்வைச்......"

(ஆ) "உண்ணுஞ் சோறு பருகுநீர்........"

(இ) "ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை....."

(ஈ) "அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத......"

(உ) "விநாயகனே வெவ்வினையை வேரறுக்க......"

(அ) (i) திருச்சிற்றம்பலம்

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போன் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப்பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே

திருச்சிற்றம்பலம்

(ii) **பொழிப்புரை:**

வளைந்த புருவங்களையும் கொவ்வைப்பழம் போலும் சிவந்த வாய், இனிய புன்னகை, குளிர்ச்சியான சடை, பவளம் ஒத்த திருமேனி, அத்திருமேனியில் விளங்கும் பால் போன்ற திருநீறு, உயிர்க்கு நல்லினிமை பயக்கும் தூக்கிய திருவடியும் காணப்பெறின் வேண்டா என வெறுத்து ஒதுக்கும் மனிதப்பிறவியும் எனக்கு வேண்டியதே.

(ஆ) (i)

உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையு மெல்லாம்
கண்ணன் எம்பெருமா னென்றென் றேகண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்கவனூர் வினவி
திண்ண மென்னிள மான்புகு மூர்த்திருக் கோளூரே.

(ii) **பொழிப்புரை:**

உண்ணும் உணவு, குடிக்கும் நீர், தரிக்கும் தாம்பூலம் எல்லாவற்றிலும் எம்பெருமான் கண்ணன் நிறைந்துள்ளான் என்பதை எக்கணமும் நினைத்துக் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிய இப்பூவுலகில் அவனது திருவருள் நிறைந்த இடம் எதுவென்று ஆராயுமிடத்து, என் இறைவன் விரும்பி இருந்து அருள் கொடுக்குமிடம் திருக்கோளூர் என்பதை உறுதியாக அறிந்து கொண்டேன்.

(இ (i)

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை அண்டம் எல்லாம்
பூத்தாளை மாதுளம் பூ நிறத்தாளைப் புவி அடங்கக்
காத்தாளை அங்கையிற் பாசாங்குசமும் கரும்பும் வில்லும்
சேர்த்தாளை முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒரு தீங்கில்லையே

(ii) **பொழிப்புரை:**

அபிராமிஉலகத்தாயாக விளங்குகின்றாள். அவளே எல்லா உலகங்களையும் படைத்துள்ளாள். மாதுளம் பூ நிறத்தை ஒத்தவள். உலகம் எல்லாவற்றையும் காத்து நிற்கின்றாள். அழகான கரங்களில் அங்குசம், மலர், பாசம், தாமரை, கரும்பு வில் போன்றவற்றை வைத்து இருக்கிறாள். மூன்று கண்களை உடைய தேவியைத் தொழும் அடியவர்களுக்கு ஒரு தீங்கும் உண்டாக மாட்டாது.

(ஈ) (i) திருச்சிற்றம்பலம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்
எந்தை நீ எனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடியடைந்தேன்
செழும் பொழில் திருப் புன்கூ ருளானே

திருச்சிற்றம்பலம்

(ii) **பொழிப்புரை:**

வள்ளிய சோலைகளையுடைய திருப்புன்கூரில் எழுந்தருளியிருப்பவனே! முனிவன் ஒருவன் உன்னை அடைக்கலமாக அடைய, அவனைக் காத்தல் நிமித்தமாக அவன் மேல் வந்த கூற்றுவனது அரிய உயிரைக் கவர்ந்த உனக்கு அடியேனாகிய யான், எனது அவ்வாற்றலையறிந்து, என்னையும் இயமன் தூதர்கள் வந்து துன்புறுத்துவார்களாயின், என் தந்தையாகிய நீ, இவன் என் அடியான், இவனைத் துன்புறுத்தாதீர் என்று சொல்லி விலக்குவாய் என்னும் எண்ணத்தினால் வந்து உன் திருவடியை அடைந்தேன். என்னை ஏற்றுக் கொண்டருள்வாய்.

(உ) (i) திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

திருச்சிற்றம்பலம்

(ii) **பொழிப்புரை**:

விநாயகப் பெருமான் கொடிய வினையினை அடியோடு அறுக்க வல்லவர், எம்மிடமுள்ள ஆசை, அவா என்பவை எம்மை ஆட்டுவிக்காமல் அவற்றைத் தணிப்பவர், அவரே மண்ணுலகம், விண்ணுலகம் என்பவற்றுக்கும் தலைவராக உள்ளார்,ஆகையால், அவரை அன்புடன் பணிந்து போற்றுவோம்.

| | |
|---|---|
| பாடல் | = 3x2 = 06 புள்ளிகள் |
| பொழிப்புரை | = 2x2= 04 புள்ளிகள் |
| மொத்தம் | =10 புள்ளிகள் |

3. **"ஈங்கிவைதாம் ஓங்கு புகழ்த் தென்புகலி வேந்தன் செயல்".**

**– திருக்களிற்றுப்படியார்–**

i. **திருஞானசம்பந்தரின் மறுபெயர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.**

பாலறாவாயர், ஞானக்குழந்தை, ஆளுடைய பிள்ளையார், தென்புகலி வேந்தன் **(02 புள்ளிகள்)**

**(இரண்டு எழுதியிருப்பின் இரண்டு புள்ளிகள் வழங்குக)**

ii. **திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் வழங்கிய சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.**

ஞானசம்பந்தர் திருக்கோலக்கா திருத்தலத்தை அடைந்து தமது பிஞ்சுக் கரங்களினால் தாளம் போட்டு "மடையில் வாளை......." என்னும் பதிகத்தைப் பாடினார். சம்பந்தரின் தளிர்க்கரம் வருந்தாமலிருக்க இறைவன் அருளால் ஐந்தெழுத்துப் பொறிக்கப்பட்ட பொற்றாளம் கிடைத்தது. **(03 புள்ளிகள்)**

iii. **திருஞானசம்பந்தர் ஆற்றிய சமூகப்பணிகள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.**

**பஞ்சம் தீர்த்தல்**

1. திருவீழிமிழலையில் நிலவிய பஞ்சத்தைக் கண்டு வருந்தி "வாசி தீரவே காசு நல்குவீர்" எனும் பதிகத்தைப் பாடி, படிக்காசு பெற்று மக்களின் பசிப்பிணியை நீக்கினார்.
2. தந்தையின் யாகத்திற்கு "இடரினும் தளரினும்......." எனும் பதிகத்தைப் பாடி ஆயிரம் பொற்காசுகள் கிடைக்கச் செய்து அவ்வூரின் பஞ்சம் நீங்க வழி செய்தார்.

**நோய் தீர்த்தல்**

1. முயலகன் என்னும் நோயால் வருந்திய கொல்லிமழவனின் பிள்ளையின் நோயைத் "துணிவளர் திங்கள் ........." எனும் பதிகத்தைப் பாடி நீக்கினார்.
2. திருக்கொடிமாடச் செங்குன்றூரில் பனிக்காலக் குளிர் நோயினால் வருந்திய மக்களின் குளிர் நோயை "அவ்வினைக்கிவ்வினை ........" என்ற பதிகம் பாடி நீக்கினார்.

**இறந்தவரை உயிர்ப்பித்தல்**

1. "மட்டிட்ட புன்னை........" என்று தொடங்கும் பதிகம் பாடிப்பாம்பு தீண்டி இறந்த பூம்பாவையை உயிர்ப்பித்தார்.
2. பாம்பு தீண்டி இறந்த வணிகனை "சடையாய் எனுமால்..........." எனும் பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.

**இயற்கையை ஏவல் கொள்ளுதல்**

1. "காரைகள் கூகை முல்லை......" என்ற பதிகம் பாடி பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கினார்.
2. "பூத்தேர்ந்தாயன............" எனும் பதிகம் பாடி ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றினார்.

**அனைவரையும் சமமாக நோக்குதல்**

"தொண்டர் குலமே தொழுகுலம்" என்பதற்கமைய தீண்டாமையை ஒழித்து அனைத்து அடியவர்களிடத்திலும் அன்பு கொண்டு ஒழுகினார். (திருநீலநக்க நாயனார் என்னும் அந்தணர் வீட்டில் ஞானசம்பந்தரும் பாணர் வகுப்பைச் சேர்ந்த திருநீலகண்டரும் அவரது மனைவி மதங்க சூளாமணியும் தங்கியமை)

**(05 புள்ளிகள்)**

**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

4. **" அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்**
**நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்**
**புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்**
**பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது"**

**- பெரிய புராணம் -**

(i) **பெரிய புராணத்தின் 'காப்பிய நாயகன்' யார்?**

சுந்தர மூர்த்தி நாயனார். **( 02 புள்ளிகள் )**

(ii) **மேற்குறித்த பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள சிவசின்னங்கள் எவை?**

விபூதி, பஞ்சாட்சர மந்திரம் (ஐந்தெழுத்து) **( 03 புள்ளிகள் )**

(iii) **வினா (ii) இல் நீர் குறிப்பிட்ட சிவசின்னங்களின் மகிமைகளை சுருக்கமாக விளக்குக .**

**விபூதி**

- விபூதியின் மறு பெயர்கள்
- வேதம் , ஆகமம் ,புராணம், இதிகாசம், தேவார திருவாசகங்களில் திருநீறு மகிமைப்படுத்தப்பட்டுள்ளது.
- கிரியைகள் மற்றும் வழிபாட்டின் போது முக்கிய சிவப்பிரசாதமாகக் கொள்ளப்படுகின்றது.
- அடியவர்களின் திருமேனிமேல் ஒழுங்கு பெற அணிந்த வெண்மையான ஒளி பொருந்தியது.
- உயிர்களின் துயரத்தைப் போக்கும்.
- மந்திரமும் மருந்துமாக உடல்நோய்களை தீர்க்கவும் பிறவிப்பிணியறுக்கவும் பயன்படுத்தப்படுகின்றது.
- அழியாத ஞானத்தினையும் செல்வத்தையும் கொடுப்பதாகவும் தீவினைகளை நீறுபடுத்துவதாகவும் அமைவது.
- தீமைகளிலிருந்து ரட்சிப்பதாகவும் ஆன்மாக்களின் மலமாசினைப் போக்குவதாகவும் அமைவது.
- விபூதி அணிவதால் ஏற்படும் வேறுபலன்கள்.

**ஐந்தெழுத்து**

- பஞ்ச + அட்சரம் என்னும் ஐந்து எழுத்துக்களால் ஆனது
- ஐந்தெழுத்து+ நமசிவாய, சிவாயநம பற்றிய விளக்கங்கள்
- சி + சிவத்தினையும் வா – திருவருட்சக்தியினையும் ய – ஆன்மாவினையும் ந – திரோதான சக்தியினையும் ம+ மலங்களையும் குறிப்பது.
- வடக்கு, கிழக்கு முகமாக தூய்மையான இடத்தில் இடது காலின்மேல் வலது காலை வைத்து நிமிர்ந்து
- உட்கார்ந்து கண்கள், மூக்கு நுனியைப் பொருந்த மானசமாக திருவைந்தெழுத்தினை செபிக்க வேண்டும்.
- முத்தியை விரும்புவோர் சிகராதி பஞ்சாட்சரத்தினையும் இவ்வுலக இன்பங்களை நாடுவோர் நகராதி
- பஞ்சாட்சரத்தினையும் செபிப்பர்.
- உயிர்களை காக்க வல்லதாய், அடியார் வாக்கில் எழுவது
- சைவர்கள் தவறாமல் உச்சரிக்க வேண்டியது “நமசிவாய” என்னும் மந்திரமாகும்.
- ஏனைய பயன்கள்

**( 05 புள்ளிகள் )**
**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

5. **“ திரிமலத்தா ரொன்றதனிற் சென்றார் களன்றி
யொருமலத்தா ராயு முளர்”**

**- திருவருட்பயன்-**

i. **மூவகை ஆன்மாக்கள் எவை?**
விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் **( 02 புள்ளிகள் )**

ii. **மூவகை ஆன்மாக்களையும் பீடித்திருக்கும் மலம் யாது? ஆன்மாக்கள் மீண்டும் மீண்டும் பிறவி எடுப்பதற்கான காரணத்தைக் குறிப்பிடுக.**
ஆணவத்திற்குட்பட்டு, வினைகளைச் செய்வதனால் பிறவி எடுக்கின்றன. நல்வினை செய்வதனால் நற்பயன்களை அனுபவிக்கின்றன. தீவினைகளைச் செய்வதனால் தீய பயன்களை அனுபவிக்கின்றன. இன்ப, துன்பங்களை அனுபவிக்க ஆன்மா பிறவி எடுக்கின்றது.

**( 03 புள்ளிகள் )**

iii. **ஆன்மாக்கள் விடுதலை பெறுவதற்கான நால்வகை மார்க்கங்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**

- நால்வகை மார்க்கங்களாவன – சரியை, கிரியை, யோகம், ஞானம்.
- இவை ஆன்மிக விடுதலைக்கான மார்க்கங்களில் முதன்மையானவை.
- “விரும்பும் சரியை முதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு மலர் காய் கனி போலன்றோ பராபரமே” என்பதன் மூலம் சிறப்பு.
- சரியைத் தொண்டுகள் – அலகிடல், மெழுகுதல், பூமாலை தொடுத்தல் போன்றன. இதன் மூலம் பெறும் முத்தி சாலோகம். உறவு முறை – இறைவனை எஜமானனாகக் கொள்ளுதல்
- கிரியை– புதிய மலர்கள், தூபம், தீபம், திருமஞ்சனம் முதலியவற்றுடன் இறைவனை மெய்யன்போடு வழிபடுதல் – சாமீப முத்தி – இறைவனை தந்தையாக வழிபடுதல்
- யோகம் – அகவழிபாடு,இணைந்திருத்தல், இறைவனைத் தோழனாகக் கொண்டு வழிபடுதல், முத்தி – சாரூபம்
- ஞானம் – அத்துவித முறையில் சிவத்தைக் காணல். இறைவனைத் தலைவனாக அல்லது காதலனாகக் கொண்டு வழிபடுதல். முத்தி சாயுச்சியம்.

**( 05 புள்ளிகள் )**
**( 2 +3 +5 = 10 புள்ளிகள் )**

6. **“கோயில் இல்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்”**
**– ஔவையார் –**

i. **திருக்கேதீச்சர ஆலய தீர்த்தத்தின் பெயர் யாது?**
பாலாவி **( 02 புள்ளிகள் )**

ii. **பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலில் இடம்பெறும் விழாக்கள் மூன்றினைக் குறிப்பிடுக**
மாதந்தோறும் வரும் ஏகாதசி உற்சவம்
ஆவணி வரலட்சுமி விரத நோன்பு, இராமநவமி
கிருஷ்ண ஜயந்தி, சப்பரம், வெண்ணெய் திருடல், வேட்டைத்திருவிழா,
திருக்கல்யாணம்,கருட சேவை
வைகுண்ட ஏகாதசி **(03 புள்ளிகள்)**

iii. **மண்டூர் முருகன் ஆலயம் பற்றிச் சுருக்கமாக விளக்குக.**
கிழக்கிலங்கையின்மட்டக்களப்புமாவட்டத்தின்தென்மேற்கே32கிலோமீற்றர்தொலைவில்அமைந்துள்ளது. சீர்பாத வரன்முறைக் கல்வெட்டுச் செய்தி பற்றிய விளக்கம். ஆலய அமைப்பு – விமானமோ, கோபுரமோ இன்றி மடாலய அமைப்பு. இதனைச் சின்னக்கதிர்காமம் எனவும் அழைப்பர்.வாய்கட்டி மௌனபூசை செய்வர். பூசை செய்பவர் கப்புகனார். இங்கு சூரன் போர் இடம் பெறுவதில்லை. பொங்கல் பொங்கி விரதத்தினை முடிப்பர்.மகோற்சவம் – ஆவணி மாதம் பௌர்ணமி தீர்த்த நாள்.வில்லேந்திய வீரர் உற்சவ காலங்களில் சுவாமிக்கு மெய்ப்பாதுகாவலராக வலம் வருவர். ஆராத்திப் பெண்கள் மயக்கமுறுவதும் பின்னர் கப்புகனார் தீர்த்தம் தெளித்து சுயநினைவுக்குக் கொண்டு வருவதும் இன்றும் இடம்பெறும் அற்புத நிகழ்வாகும்.இலங்கையில் திருச்செந்தூர்ப்புராணம் படிக்கப்படும் ஒரேயொரு ஆலயம்.

**( 05 புள்ளிகள் )**
**(2 +3 +5 = 10 புள்ளிகள் )**

7. **மேல்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக.**

(i) **மார்கழித் திருவாதிரை**

மார்கழி மாதம் வரும் திருவாதிரை நட்சத்திரத்தில் நடேசர் அபிடேகத் திருவிழா மிகவும் பிரசித்தி வாய்ந்தது. சிவனுக்குரிய நட்சத்திரம் திருவாதிரை. பத்து நாட்கள் அனுட்டிக்கப்படும் திருவெம்பா விரதத்தின் இறுதிநாள் இதுவாகும். இவ்விரதநாளில் நடேசருக்கு அபிடேகத் திருவிழாவும் ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். ஆருத்ரா என்ற சொல்லுக்கு 'நனைந்த' என்பது பொருள். நடராசப் பெருமானுக்கு ஆதிரை அன்று நடைபெறும் அபிடேகம் காண்பது பெரும் பேறு. தில்லையில் ஆருத்திரா தரிசனம் மிக விசேடமாகும். அதுபோல் இலங்கையிலும் ஈழத்துச் சிதம்பரம் என்ற பெயர் பெற்றுள்ள காரைநகர் சிவன் கோயிலில் நடேசருக்குப் பெருவிழா எடுக்கப்படும்.

**( 05 புள்ளிகள்)**

(ii) **குமரகுருபரர்**

17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்ப் புலவர். திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டம் என்ற இடத்தவர். சிகாமணிக் கவிராயர், சிவகாம சுந்தரி ஆகியோரின் மகன். முருகனின் கையால் விபூதிப் பிரசாதம் பெற்றுப் பேசும் திறன் பெற்றவர். தருமபுர ஆதினத்தில் மாசிலாமணி தேசிகரின் சீடராக இருந்தவர்.காசியில் காசிமடத்தை நிறுவி அதன் கிளை ஒன்றை திருப்பனந்தாழிலும் நிறுவியர்.

சகலகலாவல்லிமாலை,கந்தர்கலிவெண்பா, கயிலைக்கலம்பகம், ஆகிய நூல்களை இயற்றிய பின் மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழை இயற்றினார். இவர் மதுரைக்கலம்பகம், நீதிநெறி விளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், காசிக்கலம்பகம், சிதம்பர மும்மணிக்கோவை, காசித்துண்டி விநாயகர்ப் பதிகம், மறைத்தமிழ் நூல், சிதம்பர செய்யுட் கோவை முதலிய நூல்களையும் எழுதியுள்ளார். **(05 புள்ளிகள்)**

(iii) **பாடசாலையில் சைவம்**

பாடசாலைகளில் நிகழ்த்தப்படும் பல்வேறு நிகழ்வுகள் ஆன்மிக நெறிப்பட்டன.பாடசாலைகள் காலைப் பிரார்த்தனைகளோடு ஆரம்பமாகின்றன. பெரும்பாலான பாடசாலைகளில் கோயில்களும் சரஸ்வதி சிலைகளும் காணப்படுகின்றன. வகுப்பறைகளில் வழிபாட்டு மூலை அமைக்கப்பட்டிருக்கும். மாணவர் மலர் தூவி விளக்கேற்றுவர். ஆசிரியர் வகுப்பறைக்கு வரும் போது எழுந்து நின்று வணக்கம் செய்வர். எழுதும் போது பிள்ளையார் சுழி இடுதல், சிவமயம் என்று எழுதுதல், பாடசாலை நிறைவு பெறும் போது பிரார்த்தனை செய்தல்.

வெள்ளிக் கிழமைகளில் ஆலயங்கள் செல்லுதல், சிவராத்திரி, நவராத்திரி, நாயன்மார் குருபூசை, சமயப் பெரியார்களின் நினைவு தினம் , கூட்டுப் பிரார்த்தனை போன்றவை நடைபெறுகின்றன. மாலை , தோரணம் கட்டுதல் , கோலம் போடல், சமய அறிவுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகளில் பங்கு பற்றுதல் , சமயச் சொற்பொழிவாற்றல் , நற்சிந்தனை இடம் பெறுதல் போன்றன.

**(05 புள்ளிகள்)**

(iv) **ஆகமங்கள்**

வேதங்களும் ஆகமங்களும் இறையுண்மையை எடுத்துக் கூறும் நூல்கள் ஆகும். இறைவனால் அருளப்பட்டவை. ஆகமங்களில் வழிபாடுகளும் கிரியைகளும் சிறப்பாகவும் விரிவாகவும் கூறப்படுகின்றன.

ஆகமம் என்பதன் பொருள் விளக்கங்கள்

சைவ ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டாகும். சிவாகமங்களில் சிவ தருமோத்திரம் முதலிய உபாகமங்கள் 207 ஆகும். வைணவ ஆகமங்கள் சங்கிதைகள் எனவும் சாக்தாகமங்கள் தந்திரங்கள் எனவும் வழங்கப்படும்.

ஆகமங்கள் இறைவன் மூலம் மானுடருக்கு உபதேசிக்கப்பட்ட வழிமுறைகள்

சிவாகமங்கள் சைவ சித்தாந்தக் கொள்கைகளை விளக்கிக் கூறுகின்றன. ஆகமங்கள் கூறும் நான்கு பாதங்கள் .

ஆலய அமைப்பு முறைகள், படிம இலக்கணம், படிம வார்ப்புக்கள் போன்ற பல கருத்துக்களையும் கூறுகின்றன. **(05 புள்ளிகள்)**

**( 5 +5 = 10 புள்ளிகள் )**